மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.65/2019</u>

2025ம் ஆண்டு அக்டோபர் 17ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிவேல் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>17.10.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 1ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது மகன் என்றால் ஆமாம். எனக்கும், என் மனைவிக்கும் 2000 ஆவது ஆண்டில் திருமணம் ஆனது திருமணமாகி எத்தனை ஆண்டுகள் நாங்கள் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் 2, 3 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தோம். அதற்கு பின்னிட்டு எனக்கும் என் மனைவிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நாங்கள் இருவரும் விவாகரத்து செய்து கொண்டோம் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி எந்த ஆண்டு பிறந்தார் என்றால் வருடம் சரியாக ஞாபகம் இல்லை 2001 அல்லது 2002 ஆம் ஆண்டில் பிறந்திருப்பார்.

2. என் மகனின் பிறந்த தேதி எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என்ன காரணத்தினால் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே

விவாகரத்து ஏற்பட்டது என்றால் எனது சொத்துக்கள் முழுவதும் அவருக்கு வேண்டுமென்று கேட்டார் அதனால் பிரச்சனையாகி விவாகரத்து ஆனது. அதற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதியை நான் மீண்டும் திருமணம் செய்து கொண்டேன் என்றால் ஆமாம். எந்த வருடம் மீண்டும் 1ம் பிரதிவாதியை திருமணம் செய்து அதை பதிவு செய்தேன் என்றால் 2007 ஆம் ஆண்டு தேதி, மாதம் நினைவில் உள்ளதா என்றால் ஆவணங்களை எடுத்து பார்த்து தான் அதை சொல்ல முடியும்.

3. 1ம் பிரதிவாதியை நான் இரண்டாவதாக மீண்டும் திருமணம் செய்வதற்கு பின்னிட்டு நானும் 1ம் பிரதிவாதியும் எத்தனை ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் 4, 5 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தோம். எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இன்னொரு மகன் உள்ளாரா என்றால் ஆமாம் எங்களது இரண்டாவது மகன் பிறந்த தேதி மாதம் நினைவில் உள்ளதா என்றால் நினைவில் இல்லை ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். எங்கள் 2வது மகன் பிறந்த வருடமாவது எனக்கு நினைவில் உள்ளதா என்றால் இல்லை. நான் எந்த காலத்திலும் 1ம் பிரதிவாதியோடு ஒற்றுமையாக இருந்து குடும்பம் நடத்தவில்லை என்றும் ஒரு இந்து கணவன் செய்ய வேண்டிய எந்த ஒரு கடமையும் நான் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

4. 2ம் பிரதிவாதி எந்த தேதியில் பிறந்தார் மற்றும் அவர் என்ன படித்து வருகிறார் என்ற விபரம் கூட எனக்கு தெரியவில்லை என்றால் சரியில்லை என் மீது பதினாறு வழக்குகள் போட்டு உள்ளார்கள் இரண்டாம் பிரதிவாதி எந்த தேதியில் பிறந்தார் மற்றும் அவர் என்ன

படித்து வருகிறார் என்ற விபரம் கூட எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல என் மீது 16 வழக்குகள் போட்டு உள்ளார்கள்.

5. அந்த வழக்கு விபரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் ஆமாம். நான் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மீது நான் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என்னை ஒரு முறை அடித்ததால் நான் வழக்கு கொடுத்தேன். 1, 2 பிரதிவாதிகள் மீது எந்த தவறும் இல்லை என்று நான் கொடுத்த வழக்கை தள்ளுபடி செய்து விட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.17 18:49:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்